1136

பதிவு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: மாசி, ௫ 17—2—56 தளிர்–17

REGISTRAR OF BOOKS ... MADRAS

திருக்குறள் பிழிவு:

## செய் முறைக் கடன

இயற்கையும் சில பாடம் கற்பிக்கின்றது. மக்கள் பிறந்து வளர்ந்து வருகின்றனர். இளமையில் முதலில் கல்வியே கற்பிக்கப்படுகின்றது. தொழிலோ வேறு பொருள் முறையோ அல்ல. கல்வியிலும் அறிவுக் கல்வி முதலிலும், பின்பு அறிவுக் கல்வியோடு தொழில் முதலிய பிற கல்விகளும் கற்பிக்கப்படுகின்றன.

திருவள்ளுவர் திருக்குறளில், பொருட்பாலின் தொடக்கம், இம் முறைமையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும், கல்வி கற்கும் நோக்கம் பயன் எல்லாம் அறிவு, செயல் திறம், ஊக்கம், மெய்யறிவு முதலியன பெறுதலாகவே ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார்; இவை, எல்லாவற்றிற்கும் பொது; வாழ்க்கைக்கே பொது.

மாணவர்கள் இப்போது கல்வியிற் பயில்வதும், கற்றவர்களுக்கு உத்தியோகம் தருவது கடமையாவதும் முன் குறிப்புகட்கு முற்றும் இசைந்தன அல்ல.

வாழ்க்கைத் தெளிவுக்காகக் கல்வி பயின்று பொருள் தேவைக்காக ஏதேனும் தொழிற் கல்வியால் பெரும்பாலும் உடலுழைப்பால் உழைத்து, வாழ்க்கை யினிமைக்காகப் பிறர்க்கு உதவியாய் அன்பு அருள் செய்து, தூய்மைக்காக வாலறிவன் தாள் இணக்கத் துடன் வாழும் முறைகளையே ஆசிரியர் அறிவுறுத்து கின்றார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 0 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை | மன்மத, | தளிர் |
|---|---|---|
| 8 | 17-2-56 | 17 |


# ஆக்கப் பணித் திட்டம்

இதைப் பலர் பலவகையாகச் செய்கின்றனர். புதிய வகையில் உழவு, தொழில் முதலியவற்றால் நாட்டின் பொருளியலைப் பெருக்க முதலில் முற்படுகின்றனர். அப்படியே பசிக்கும், பராக்குக்கும் வேலைகள் தரவும் முந்துகின்றனர். உரிமையைக் காத்துக் கொள்ள, இணக்கமில்லாத வகையில் ஒற்றுமை தேடவும் முனைகின்றனர். தற்கால அமைதியைக் கருதி, நிலையான அமைதிக்குரிய வழிகளை இழந்து விடுகின்றனர். பொதுப் பணிகளில் ஏதேனும் பற்றுள்ளத்தால் தடுமாறுகின்றனர்.

திருக்குறள் போன்ற பொய்யா மொழிகளின் கருத்து, இவற்றிற் கெல்லாம் நேர்மாறாய் உள்ளது. மேற்கூறிய ஐவகைப் போக்கைப் பற்றியும் ஆசிரியர் கருத்துக்களைப் பார்க்கலாம்.

பொருள் நிலைக்குக் கல்வி அறிவு முக்கியம் என்று அதனைப் பொருட்பாலின் முதலில் ஆசிரியர் விளக்குகின்றார்; பொருளைப் பெருக்குதற்கு உடம்புழைப்பின் தொழில்களையும் ஆசிரியர் கருதுகின்றார்; நிலையான அமைதியான அடிப்படையான தொழிலுக்கு உழவு தொழிலையே முக்கியத் தொழிலாகக் குறிப்பிடுகின்றார். நாட்டுக்கு ஆக்கப் பணி செய்வோர், பயன்படும் கல்வி முறையை வகுத்து முதலில் செயற்படுத்திக், கற்றவர் பெரும்பாலாரும் முக்கியமாய் உழவிலும் பிறவற்றிலும் ஈடுபடும் திட்டங்களை இயக்க வேண்டும் என்று இதிலிருந்து தெரிகின்றது.

கல்விக்கு மொழி அடிப்படை; மொழிக்குத் தாய் மொழி அடிப்படை; இவ்விரண்டுக்கும் முன்னோர் நூல்களும் மரபுகளும் அடிப்படை; இவற்றிற்கு இவை வழங்கும் எல்லைகளும் எல்லை வாழ் மக்களும் தேவை. ஓர் உரிமை நாட்டில் ஒவ்வொரு மனிதனும் இந்த முன் உரிமைகளின் அடிப்படை மேலே தான் வாழும் உரிமை உடையன். ஆதலால், உரிமை காக்க முற்படுவோர், இயற்கையாக மக்கள் இணக்கம் கொள்ளுதற்கு மொழி வழி மாநில அமைப்பின் வழி ஒற்றுமையும் உரனுங் காண முற்பட வேண்டும்.

நூல் முதலிலேயே அறத்தை முன்வைத்துத் திருவள்ளுவர் அனைத்தும் கூறுகின்றார். ஆதலால் பொதுவாக எத் திருத்தங்களிலும் நேர்மை முதன்மையானது. அது, நிலையான அமைதியைத் தரும். நேர்மைக்குப் புறம்பாய்ச் சிலர்க்கு உவப்பாகத் தற்கால அமைதிக்குரிய செயல்களை நாடினால், விரைவில் அது பெருங் குழப்பத்தை மூட்டி விடுகின்றது. நேர்மையோடு தற்கால அமைதியும் கிட்டுமானால் அதனை மேற்கொள்வது இழுக்காகாது. பொதுப் பணிகளில் ஒரு வகைப் பற்றுள்ளமும் இத்தகைய இடையூறுகளைப் பெருக்கிவிடுகின்றன.

நாட்டு நடப்புகள் சான்றாண்மையைக் குறியாகவும் நெறியாகவும் கொண்டு நடக்க வேண்டி இருக்கின்றன. ஏனென்றால், வாழ்க்கைக்கு அதுவே குறிக்கோள் என்பது பெரியோர் கருத்து.

ஒப்புமை:

திருவள்ளுவர் நான்முகனை ஒப்பவர்; உலகளந்த பெருமானை ஒப்பவர்; கைம்மாறு கருதாமல் எல்லார்க்கும் ஒப்பப் பொழியும் மழைமுகில் போன்றவர்; கீதை உதவிய கண்ணபிரான் உத்தர மதுரைக்கு அச்சென்பதுபோல் திருக்குறள் உதவிய திருவள்ளுவர் தென்மதுரைக்கு அச்சாவர்.

திருவள்ளுவர் வாக்கு, கலைமகள் வாக்கு; அவர் வாக்கு, தலைவணங்கத் தக்கது; அது, கற்பக மலர்; உலகுக்கு நல்ல மருந்து; தாமரை மலர், சாம்புநதப் பொன், காமதேநுப் பசு, அயிராவத யானை, திருமால் தேவர் ஒப்பச் சிறந்து திகழ்வது திருக்குறள்; இதயத் தாமரையை மலரச் செய்து ஞாயிறுபோல் இருளை நீக்குவது.

ஒவ்வாமை:

திருவள்ளுவரை ஒப்பவர் எம்மொழியிலும் இல்லை; திருமாலின் குறளவதாரத்தைவிடச் சிறந்தது திருவள்ளுவர் குறள்; திருக்குறளுக்கு மேற்பட்ட நூல் ஒன்று உண்டென்று துணிந்து சொல்வார் யாரும் இல்லை; அது, நான்மறைகளைவிடச் சிறந்தது; அவற்றின் கருத்தை விளங்கவைப்பது; நான்மறைக் கருத்தும் திருக்குறள் கருத்தும் ஒன்றேயாயினும், திருக்குறளை எல்லாரும் பயிலலாம்; அதனால், பயன் பொய்ப்பதில்லை. தலைசிறந்த செய்யுள், தலை சிறந்த பாட்டு, தலை சிறந்த கருத்துடையது.



களே யல்லது வேறில்லை. இந்த அகத்திருள் நீங்கு மானல் வறுமை பகை நோய் முதலிய புறத் தொல்லைகளை எளிதில் வென்றுவிடலாம்.

வையத்து வாழ்வார் மனத்துப், பொய் பொய்யாகவும் மெய் மெய்யாகவும் தோற்றும்; அவற்றிற் கேற்றபடி செயல்களும்நிகழும். இடர்கள் தீர்ந்துஎளிதில் வெற்றிகளும் உண்டாகும். சீர் திருத்தம் செய்ய வேண்டிய வகை இது!

இதற்கு இரண்டு வகையான வல்லமை வேண்டும். முதலில் மாந்தர் மனத்தழுக்கு நீக்கும் அடிப்படைத் திறமை வேண்டும்; அதன்பின், இவை பொய் இவை மெய் என்று சரியாய்த் துணிந்து உளங்கொள அறிவுறுத்தும் வல்லமையும் வேண்டும். தெய்வத் திருவள்ளுவர்க்கு இவ் விருவகைத் திறங்களும் இனிதமைந்திருந்தன.

அதனல், அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என்று அவர் செப்பிய குறளால், வையத்து வாழ்வார் மனத்து, பொய்ப் பகுதிகள் பொய்ச் செய்திகளாகவே தீர்ந்தன; மெய்ச் செய்திகள் மெய்ப் பகுதிகளாகவே விளங்கின! உலகம் நல்வாழ்வில் வாழ்வதற்கு வாய்ப்பாயிற்று.

திருக்குறள் ஒரு நூலாலேதான் இது பொய், இது மெய் என்று செய்திகளைத் துணிய முடியும்; அதற்கேற்ற உள்ளத் தூய்மையும் தூய உண்மைகளும் அது மக்களுக்கு ஊட்டுகின்றது; அந்த ஆற்

றல் வேறு எந் நூலுக்கும் இல்லை. மன்பதைக்கே திருக்குறள் இங்ஙனம் ஒரு வேத நன்கொடை!

—தேனீக் குடிக் கீரனார்

திருவள்ளுவர் செய்த திருக்குறளை 'முப்பால் நூல்' என்பர்; ஆனால் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலும் அறிந்து, வீடு என்னும் நான்காவதும் தெளிந்து கொள்ளும்படி, அந் நூல் இயற்றப் பட்டிருக்கின்றது.

ஆராய்ச்சி முறையில் அறிந்துகொள்ளத் தக்கவை, அறம் பொருள் இன்பம் என்னும் முப்பகுதி உறுதிப் பொருள்களே! வீடு, அவற்றின் நுகர்வால் விடுதலை உண்டாகித் தெளிந்திருக்கும் நிலை.

திருக்குறளால் நான்கும் எமக்கு வாய்த்தன. முன் நூல்களாலும் பிறவற்றாலும் அவை அமையவில்லையோ என்றால், இல்லையே; அறம் முதலிய நாற் பொருள்கள் பற்றி இதற்குமுன் கேளாத நுட்பங்களும் முறைகளுமெல்லாம் திருக்குறளில் வந்திருக்கின்றன. உண்மைகளையும் உண்மைகளின் கூறுகளையும் அத்துணைத் தெளிவாக இதற்குமுன் அறிந்ததில்லை.

திருவள்ளுவர் வாய்மொழியினாலேதான் இங்ஙனம் கேளாதனவெல்லாம் கேட்டு, அறத்தின் கூறுபாடுகளை அறிந்தேம், விரிவான பொருட் பிரிவுகளை அறிந்தேம்; இன்பத்தின் நுண் திறங்களை அறிந்தேம் அம்மட்டோ, எளிதில் தெளிதல் இயலாத வீட்டின் இயல்பும் இனிது தெளிந்தேம்.



# தொகுப்புரை

**தெய்வத் தன்மை:**

திருக்குறள் ஆசிரியர், திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்; தெய்வத் தன்மை வாய்ந்த திருவள்ளுவரைப் பொதுவாக ஒரு மனிதன் என்பவன் பேதை; அவன் சொல்லை அறிஞர் கொள்ளமாட்டார்.

தமிழ்க்குத் திருக்குறள் வேதம்; திருவள்ளுவர் குரு; வேறு வேதம் இதிகாசம் தர்சனம் போன்ற எல்லா நூல்களின் உண்மைகளும் திருக்குறளில் அடக்கம். உலகுக்கு அறிவு கூறும் நூல் திருக்குறள்.

புலவர் என்பவர் திருவள்ளுவரே; அவர் புலவர் மணி; பெரு நாவலர்.

**சுருக்கச் சிறப்பு:**

சுருங்கிய சொல்லால் பொருள் விளங்கச் சொல்லுவது திருக்குறள்; தினையளவு குறள் பனையளவு பொருள்; திருக்குறளின் சுருங்கக் கூறல் அழகு, கடுகைத் தொளைத்து ஏழுகடல் வளமும் அதனுள் அடக்கியதை ஒக்கும்; அற்றன்று, அணுவைத் தொளைத்து எழுகடலை அடைத்தது.

வகையினரே அதனை உண்டறிவார் என்று கூறுவர்; ஆனால், திருக்குறள் முப்பால் வளத்தை உலகு முழுதும் நுகர்ந்து நலமுறலாம்.

திருக்குறள் எவ்வுலகோர்க்கும் பொதுவாகத் திரட்டி வழங்கப்பெற்றிருக்கும் அருளமிழ்தம்! தமிழாற் சுவையும் அருளாற் பயனும் நிறைந்த தமிழ் அருளமுது!

—ஆலங்குடி வங்கனார்

நிலவளம் மலைவளம் கடல்வளம் என்பவற்றில், கடல் வளமே மிகுதியானது; ஒரு கடுகைத் தொளைத்து அதனுள் எழுகடல் வளமும் புகவிட்டு அடக்கினால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கின்றது, மாந்தர் உள்ளங்களில் எழுகின்ற அறம் பொருளின்பக் கருத்து வளங்களைத் திருவள்ளுவர், குறுகிய குறட்பாட்டில் அடக்கி அமைத்த திருக்குறள்! சொற் சுருக்கத்துக்கும் பொருட் பெருக்கத்துக்கும் திருவள்ளுவர் குறள்மறைக்கு நிகர் ஏது?

—இடைக்காடர்

திருக்குறளின் சுருக்க விளக்கங்கட்கு அப்படிச் சொன்னால் போதாது; 'ஓர் அணுவைத் தொளைத்து அதனுள் எழுகடலைப் புகவிட்டுக் குறுகத் தறித்து வைத்தாற் போன்றது குறள்' என்று சொல்ல வேண்டும்.

—ஔவையார்

---



வீட்டின் இயல், விரித்து விளக்கும் இயல்பினதன்று; அப்படி விளக்க முற்பட்ட நூல்களைவிட, திருக்குறளில் அவ்வியல் இனிது தெளிந்துகொள்ள முடிந்தது. முப்பாலில் நாற்பால் விளக்கும் இயற்கை அமைதியைத் திருவள்ளுவர் பின்பற்றியதுதான், அத் தெளிவுக்குக் காரணம்! திருக்குறள் ஓர் இயற்கை நூல், தெய்விக நூல்!

—கொடி ஞாழல் மாணி பூதனார்

மக்கள் வாழ்க்கைக்கு இதுதான் உரிய நல்வழி என்பது இயல்பாகவே உள்ளது; முந்தியே அமைந்து கிடந்தது. ஆனால் அதனை மக்கள் தெளிவாக அறியும்படி சரியாக யாரும் எடுத்துக் காட்டவில்லை. திருவள்ளுவருக்கு அதற்கேற்ற நாவன்மையும் மெய்ப்புலமையும் நன்கமைந்தன. வாழ்க்கை நன்னெறி விளக்கி இனிய குறள் வெண்பா அருளினர்.

திருக்குறள் இனிய கலைத்திறமும் வாய்ந்தது, உயர்ந்த அருள் நலமும் சிறந்தது. இவ் விருவகையாலும் அது சுவை பயந்து நிற்கின்றது. திருவள்ளுவர் குறட்பாக்கள், கருதக் கருதச் சிந்தைக்கு இன்பஞ் செய்வன; கேட்கக் கேட்கக் காதுகட்கு இன்பம் பயப்பன; சொல்லச் சொல்ல வாய்க்கும் இன்பம் ஊறுவன. இங்ஙனம் இலக்கியச் சுவை சொட்டச் சொட்டத் திருக்குறள் அமைந்திருக்கின்றது!

ஆயினும், சில நூல்களைப் போல் இன்பம் செய்வதுமட்டும் திருக்குறட் பயன் அன்று; வெற்றுப்

பொழுது போக்கு நூல் அன்று, அது! மிகப் பெரியதான, முக்கியமான, வாழ்க்கைக் குறிக்கோட்கே முன்னின்று உதவுவது! பிறவியின் வினை தீர்த்துப் பிறவாப் பெருநிலையில், பேராப் பேரியற்கையில் திகழ வைப்பது; உருத்துத் தொடர்ந்து வரும் இருவினைக்கும் மாமருந்து அது!

இப்படிச் சுவை நலமும் ஞான நலமும் அமைந்தது திருக்குறள்! முந்திய நன்னெறியை நாம் அறிந்து உய்யும் பொருட்டே நாப் புலமை வள்ளுவனர் இன்குறள் வெண்பா பன்னினர்!

—கவுணியனர்

உலகத்தில் வெளியிருளைப்போக்குதற்குப்பகலில் ஞாயிறும், இரவில் திங்களும் முன்னிரா பின்னிராக்களில் வியாழன் வெள்ளிகளும் உள்ளன; ஒன்றுக்குப் பல ஒளிப்பொருள்கள் புற விருளைப் போக்க அமைந்து, காலந்தோறும் மாறிமாறிச் செயல் கொள்ளுகின்றன.

இத்தனைக்கும் வெளியிருள் என்பது, கண்ணுக்குத் தெரிந்த இருள்! இதையும், மேற்கூறிய ஞாயிறு முதலான ஒளிப் பொருள்கள் முற்றிலும் நீக்குதல் இல்லை; நிலையாக நீக்கி விடுதலும் இல்லை; இருள், விரைந்து நீங்குவதுபோல் மறைந்து, மீண்டும் விரைந்து பரவி விடுகின்றது.

ஆனல், உலக மக்கள் அனைவர் உள்ளத்திலும் நுண்ணிய உள்ளிருளைத் 'திருக்குறள்' ஒன்றே நீக்கி விடும்; அப்படிப்பட்ட பேரொளித் திருமறையாய்த் திருக்குறள் திகழ்கின்றது!

திருக்குறள் காட்டும் மெய்யொளி ஒன்றே போதும், மாந்தர்தம் அக இருளுக்கு! அதோடு, அவ்விருளை முற்றிலும் நீக்கி விடும்; நிலையாகவும் நீக்கி விடும்; மீண்டும் இருள் விரவாது!

காரணம், திருவள்ளுவரும் அவரியற்றிய இன்குறளும் அவ்வளவு, தெள்ளுணர்வு பொழியும் வற்ரு அருளொளி ஊற்றுக்கள்! உணர்வு ஒளிகளின் முன், வெள்ளி வியாழன் ஞாயிறு திங்கள் ஒளிகள் எம்மட்டு?

—மதுரைப் பாலாசிரியனர்

பாட்டுக்கு வளம் என்பது, பயில்தொறும் ஊறும் சுவைப் பெருக்கும், பயன் கொழிப்புமாகும்; வள்ளுவர் பாட்டில் இவ் வளம் வியக்கத்தக்கபடி அமைந்துள்ளது; வாய் நிறைத்து உண்ணும் தெள்ளமுதின் தீஞ்சுவையும் பயனுங்கூடத் திருக்குறள் வளத்துக்கு நிகரில்லை.

துன்பத்துள் துன்பமாகிய சாத்துன்பமும் நீக்க வல்ல பெரும்பயன் உடையதுதான் அமிழ்தம்; ஆயினும் அடுத்துப் பிறந்துஇறத்தலை அது நீக்காது, திருக்குறள், மக்களுக்கு, இறவித் துயரை நிலையாகவே தீர்த்துவிடும் பெருவளம் படைத்தது!

மேலும், அமுதம் அனைவர்க்கும் கிடைப்பது அரிது; இறைவன் திருவருளால் முன்பு தேவர் ஒரு

# அன்பின் பிழம்பு

**அறிவின் முடிவு:**

அன்பு இருந்தால் அறிவு வேலை செய்யாது. சிலர் அறிஞர் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுவார்கள். என்னை யாராவது அறிஞர் என்றால் எனக்குக் குறைவாகத் தான் இருக்கிறது. அன்பன் என்று அழைக்கப்பெறுதல் சிறந்தது; அதனினும் 'அருளாளர்' என்னும் பெயர் உயர்ந்தது. அருள் பெறவேண்டு மென்றால் அறிவு அன்பால் அழிய வேண்டும். கருத்தில் கண்ணப்பரளவு அன்பு பெருக வேண்டும். அதனால் 'நான்' அற்று விடும்.

**அன்பு குடிலே;**

என்றாலும் அன்பு குடில் தான். அங்கே தன்னலம் உண்டு. தன்னலமற்ற சிறந்த வாழ்வு வாழ வேண்டுமானால் அருளையே பெற வேண்டும். "அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது உலகப் பொதுமறை யாதலின், அன்பிலும் தன்னலம் உண்டா? என்று கேட்கலாம். பிறர்க்கு என்பது இங்கே தம்மைச் சேர்ந்த பிறரையே சிறப்பாக உணர்த்தும்.

அன்பு செய்யுங்கால் புண்ணியம் கிடைக்கும் என்ற எண்ணமும் சிலர்க்கு உண்டு: பொருளை, உழைப்பை, உயிரைத் தருவதால் ஒன்று பலவாகி மறுமையிற் பயன் தரும் என்ற நோக்கம் இருக்கும்.

அன்பு,தொடர்புடையார் பால் காட்டப்படுவதே. ஒரு பொருளைத் தன்னைச் சேர்ந்தவருக்குக் கொடுத்தல் தன்னலமே. பாபர் ஹுமாயூனுக்காகத் தன்னுயிரை ஈந்தானென்றால், அடிப்படைக் காரணம் தன்னலந்தானே; எனவே, அன்பில் தன்னலம் இருக்க இடமுண்டு. இறைவன் அருள் ஒன்றே தன்னலம் அற்றது.

தன்னலம் கழன்றுவிட்டதால் கண்ணப்பர்அன்பின் நிறைவைப் பெற்று அருளின் தொடர்பில் நின்றார். அன்பு பிழம்பாய் நானறும் மாட்சிபெற்றார். ஓர் உயிர் தன் இயல்பாகிய அன்பில் எவ்வளவு உயரலாமோ அவ்வளவும் கண்ணப்பர் உயர்ந்துவிட்டார் என்பது, அன்பு பிழம்பானார் என்பதன் கருத்து. தன்னலம் இழந்து நான் என்பதற்ற ஞான முடிவிலே அருளிலே வீடு பெறலாம்.

இனி, கண்ணப்பர் மேற்கொண்ட ஊன் ஊட்டும் செயல் கொடுமையானது. ஆயினும், நேர்மை வழி நின்ற சிவகோசாரியாரினும் சிறந்த பயன் அடைந்தார். அன்பினால் கொடுமையை வென்று விட்டார்.

**தீமைத் தீர்வு:**

எனினும், செய்த கொடுமைக்குத் தண்டனை அடைந்தார். அப்பரும், இறைவனை மறந்துவிட்ட பிழைபாட்டில் இருந்தமையால்தான் தெய்வக் கொள்கையில்லாத சமண் சமயத்தைச் சார்ந்தார்.

இறைவனை மறந்ததற்குத் தண்டனை மீண்டும் பிறவி எடுப்பதே; கரு வேதனையைத் துய்க்க வேண்டும். இறைவனை மறந்த தெய்வக் கொள்கை யில்லாத சமண் சமயத்தைச் சார்ந்த அப்பர், சூலை நோயால் வருந்தினார். சூல் என்பது கரு; சூலை என்றால் கரு வேதனை. மிக்க துன்பம் தரும் வயிற்று நோய், கருவேதனையின் பெயரால் குறிப்பிடப்பட்டது. இறைவன் கையில் வைத்திருக்கும் (மும்மலங்களைத் தீர்க்கின்ற குறிப்பை உணர்த்தும்) முத்தலை வேலுக்கும், 'சூலம்' என்றே பெயர். பிறவியைத் தீர்ப்பது என்பது கருத்து.

**இரு தீர்வுகள்:**

கண்ணப்பர் இறைவனை நாடுதலில் இரு பிழைகளைச் செய்தார். எல்லா உயிர்களையும் கொன்று வந்து, படைத்தது ஒரு தவறு; மற்றொன்று, தூய வழிபாட்டையும் மாசு படுத்தியது.

அம்பை எய்து கொன்றதற்குத் தண்டனையாக, அதே அம்பால் செந்நீர் வாரத் தம் வலக் கண்ணைப் பேர்த்து இறைவனுக்கு அப்ப நேர்ந்தது. அது பொருட் கண்! உயிரின் உடம்புகளும் பொருள்களே யாதலால், அவற்றைக் கொன்று அழித்தமை, கண்ணப்பரின் பொருட் கண்ணை அழித்துவிட்டது; இறைவனது பொருட்கண்

ணாகிய வலக்கண்ணில் முதலில் செந்நீர் வந்ததும் அதனாலே தான். உயிரின் உடம்புகளுக்கு நேர்ந்த துயரங் கருதி இறைவன் கண்ணீர் விட்டார்.

மற்றது கலைக்கண். கலையாவது வேதம், மந்திரம், ஞானம், எழில், என்பன. இறைவனைக் கலைகளால் வழிபட வேண்டியிருக்க, அவ்வாறு வழிபட்ட சிவகோசாரியாரது தூய வழிபாட்டையும் நாளும் மாசு படுத்தி வந்தமையால், இறைவனது இடக்கண்ணாகிய கலைக் கண்ணும் அதன் பொருட்டுச் செந்நீர் சிந்தியது. கண்ணப்பர் தம் இடக்கண்ணையும் பெயர்க்க முற்பட்டார்.

ஆனால் அது, இறைவன் வழிபாட்டைப் பற்றியதாய் இருந்ததால், அது தம்மைப் பற்றியதென்று இறைவன் கருதி மன்னித்துவிட்டார்; கண்ணைப் பெயர்க்காமல் கண்ணப்பரும் தடுத்தாட் கொள்ளப்பட்டார்.

பொருளும் கலையும் அற முறைமையில் இயங்கவேண்டும் பொருளும் கலையும் இறைவனைத் தொடர்பு கொண்டு, இறைமைக் குணங்களைப் பெற வேண்டும். பொருள்தேடி, கலை தேடி, அறத்தின் ஒரு பகுதியான அன்பு பெருகி அன்பின் பிழம்பாகி அறத்தின் மற்றொரு பகுதியாகிய அருள் நாட்டமுங் கொண்டு உயர்ந்தார் கண்ணப்பர்.

—அமிர்தலிங்கம்

## முல்லைக் கொடி நேயர்க்கு

### அன்பார்ந்த அறிவிப்பு

முல்லைக்கொடி 8-கிளையிலிருந்து ஓர் ஏட்டின் பக்கங்கள் செய்திகளாகவும், பற்றோர் ஏட்டின் பக்கங்கள் நூல்வடிவிலும் வெளி வருகின்றன.

நூல்வடிவில் வெளிவருவது 8-பக்கங்கள். அவற்றில், சில கிழமைகளில் 4-பக்கங்களில் ஒரு நூல் தொடர்பும், இன்னொரு 4-பக்கங்களில் வேறொரு நூல் தொடர்பும் வெளி வருதல் உண்டு. பக்கத் தொடர்பு, கருத்துத் தொடர்பு, தலைப்புத் தொடர்பு முதலியவற்றைப் பார்த்து அவற்றை வகை செய்து கொள்ளலாம்.

நூல்வடிவில் இப்போது வெளிவருவன 'திருக்குறள் விளக்கம்' ஒருவகை; 'திருவள்ளுவமாலை விளக்கம்' ஒரு வகை.

'திருவள்ளுவமாலைவிளக்கம்' இரண்டொரு கிழமைகளில் முடிந்துவிடும்; திருவள்ளுவமாலைச் செய்யுளும் அதனுடன் சேர்க்கப் பெற்றிருக்கிறது; தொகுப்புரையும் கொடுத்திருக்கிறது; திருவள்ளுவமாலைக்கு இருக்கும் திருத்தணிகைச் சரவணப் பெருமாளய்யர் உரையில் சில அரிய குறிப்புகள் திருக்குறளின் சிறப்பைப் புலப்படுத்துதலால், அவற்றையும் திரட்டி இணைத்திருக்கிறது. செய்யுளுக்கு அருஞ்சொல் அகரவரிசை இறுதியில் உள்ளது.

முடிவில் நேயர்கள் இவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து, திருவள்ளுவர் புகழ்மாலையாகத் தைத்துக் கட்டுச் செய்து ஒரு நூலாக்கிக் கொள்ளலாம்.

'திருக்குறள் விளக்கம்' நான்கு நான்கு அதிகாரங்களுக்கு ஒரு நூலாகக் கோத்துக் கொள்ளலாம்; அல்லது திருக்குறள் இயலின்படி அமைத்துக் கொள்வதும் அவரவர் விருப்பப்படி செய்து கொள்ளலாம்.

* * *

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)